# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**<u>இன்வெஸ்ட் இந்தியா மற்றும் சர்வதேச சூரியக்கலக் கூட்டணியின் SolarX Startup சவாலில் இலங்கை ஆரம்பநிலை நிறுவனங்கள் சாதனை</u>**

SolarX Startup சவாலில் (ஆசியா-பசுபிக் பிராந்தியம்) இலங்கையைச் சேர்ந்த அதிக எண்ணிக்கையிலான போட்டியாளர்கள் வெற்றிபெற்றுள்ளனர். இன்வெஸ்ட் இந்தியாவுடன் இணைந்து சர்வதேச சூரியக் கல கூட்டணியால் COP 28 இல் தொடங்கப்பட்ட இச்சவால், சூரிய சக்தி துறையில் புதுமையான தீர்வுகளை அடையாளம் கண்டு அவற்றினை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

2. இந்த ஆண்டில் இலங்கை, அவுஸ்திரேலியா, பப்புவா நியூ கினியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சவுதி அரேபியா மற்றும் ஏனைய நாடுகள் உட்பட ஆசியா-பசுபிக் முழுவதும் உள்ள நிறுவனங்களில் முதல் 20 ஆரம்பநிலை நிறுவனங்களை இச்சவால் திட்டம் அடையாளம் கண்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட இருபது ஆரம்ப நிலை நிறுவனங்களில் நான்கு இலங்கையைச் சேர்ந்தவை ஆகும். இன்வெஸ்ட் இந்தியா மற்றும் சர்வதேச சூரியசக்தி கூட்டணி ஆகியவற்றுடன் இணைந்து, இந்த ஆண்டின் ஆரம்பத்தில் இந்திய உயர் ஸ்தானிகராலயம் ஏற்பாடு செய்த பயிலரங்கில் இந்த ஆரம்பநிலை நிறுவனங்களுக்கு இச்சவால் குறித்து அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது.

3. இந்நிலையில் இப்போட்டிகளில் இலங்கையிலிருந்து பங்கேற்று வெற்றிபெற்ற பின்வரும் வெற்றியாளர்களுக்கு தலா 15,000 அமெரிக்க டொலர்கள் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது, அத்துடன் வழிகாட்டுதல், முதலீட்டாளர் இணைப்புகள் மற்றும் சந்தை அணுகல் வாய்ப்புகளை உள்ளடக்கிய மேம்படுத்தல் ஆதரவு ஆகியவையும் வழங்கப்பட்டுள்ளன.

| ஆரம்பநிலை நிறுவனங்கள் | விளக்கம் |
|---|---|
| Bio Lanka Exports (Pvt) Ltd | Bio Lanka Exports நிறுவனமானது சூழலுக்கு உகந்த சூரியக்கல வசதியுடனான கொள்கலன் வீடுகளை உருவாக்கும் ஒரு நிறுவனமாகும், வதிவிட மற்றும் வர்த்தக நிறுவனங்களை உருவாக்குவதற்கான மூலப்பொருள் மற்றும் நிர்மாணக் கழிவுப்பொருட்களின் அளவினை இது கணிசமாக குறைக்கின்றது |
| Magicbit Pvt. Ltd. | நிகழ்நேர புலப்படுத்தல் மற்றும் உயர் திறனுக்காக செயற்கை நுண்ணறிவு, IoT, cloud ஆகியவற்றை ஒருங்கிணைத்து சூரிய சக்திக்கான ஆய்வுக் களம், நிகழ் நேரக் கண்காணிப்பு மற்றும் திறந்த தளத்தினை Magicbit வழங்குகின்றது. |
| Syntax Genie (Pvt) Ltd | Syntax Genie இன் AI-அடிப்படையிலான இயங்குதளமானது, சூரியக்கல சிறு-வலையமைப்பின் முகாமைத்துவத்தை |

| | |
|---|---|
| | மேம்படுத்தி, ஆசியா-பசுபிக் பகுதிகளில் வலுச்சக்தி பற்றாக்குறையினை பாரிய மற்றும் நிலையான தீர்வுகளுடன் நிவர்த்தி செய்கிறது. |
| Bluechip Technologies Asia | AI, IoT, GPS மற்றும் ட்ரோன் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, காலம் முழுவதும் சூரிய சக்தி திட்ட அமுலாக்கத்தினை மேம்படுத்தி, திறமையான தளம் மற்றும் திட்டமிடலை Bluechip Technologies உறுதி செய்கிறது. |

4. 2024 டிசம்பர் 12 ஆம் திகதி அன்று கொழும்பில் SolarX Startup சவால் திட்டத்தின் இரண்டாவது சுற்றினை இன்வெஸ்ட் இந்தியா ஒழுங்கமைக்கின்றது. இந்த நேரடி பட்டறையானது, புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் உள்ள ஆரம்ப நிலை வழிகாட்டுதல் அமர்வுகள், கலந்துரையாடல்கள் மற்றும் நேரடி வாய்ப்புக்களுடன் ஆளுமையினை மேம்படுத்தும் ஓர் அமர்வாகும். இது இலங்கையில் உள்ள சூரிய மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுச்சக்தி தளங்களுக்கான களப்பயணங்களை மேற்கொள்ள வழிவகுப்பதுடன் உள்ளூர் சுற்றுச் சூழல் குறித்து ஆரம்ப நிலை நிறுவனங்களுக்கு நேரடியான அனுபவத்தை வழங்குமென்பதும் குறிப்பிடத்தக்கது.

*****

**கொழும்பு**
**11 டிசம்பர் 2024**

........................................................................